
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   08.07.2024 திங்கட்கிழமை   இதழ் : 190   பக்கங்கள் : 12

# இன்றும் நாளையும் அரச சேவைகளின் ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டம்!

## 200இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் விடுமுறை போராட்டத்தில் குதிக்கின்றன

- ஆசிரியர்களும் நாளை ஆதரவாக போராட்டம்

கொழும்பு, ஜூலை 08

**இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் அரச சேவை துறைகளை சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடுகின்றன.**

இந்தப் போராட்டத் துக்கு ஆதரவு தெரிவித்து நாளை செவ்வாய்க்கிழமை ஆசிரியர்கள் மற்றும் அதி பர்கள் சங்கமும் போராட் டத்தில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அஞ்சல் சேவைகள், நில அளவைத் திணைக் களம், அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொது முகாமைத்துவ உதவியாளர்கள், தபால் தொலைத்தொடர்பு சேவையினர், சமூக சேவைகள் உத்தியோகத் தர், கால்நடை போதனா சிரியர்கள், அரச தாதி யர்கள், பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களை சேர்ந்தவர்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட வுள்ளன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப சம்ப ளம் உட்பட்ட கொடுப் பனவுகள் அதிகரிக்கப்பட வில்லை, நீண்டகாலமாக நிலவிவரும் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப் படவில்லை, ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்புகள்கூட வழங் கப்படவில்லை, 2019 இலிருந்து பெரும் பாலான ஏற்றுக் கொள்ளப்பட்ட

11

# ஜனாதிபதி ரணிலுக்கு தொடர்ந்தும் ஆதரவு!

## பஸில் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்போம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடு பற்றி நன்கு சிந்தித்து இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரோஹித அபேகுணவர்த்தனவின் அரசியலுக்கு வந்து 27 ஆண்டுகள் நிறைவு விழா களுத்துறை யில் நடந்தது. இதில், உரையாற்றியபோதே

11

# தென்மராட்சியில் இன்று கதவடைப்பு போராட்டம்

தென்மராட்சி, ஜூலை 08

தென்மராட்சி பிரதேசத்தில் இன்று திங்கட்கிழமை கதவடைப்பு போராட்டம் நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த 30 சமூக, வணிக, பொது அமைப்புகள் பூரண ஆதரவு தெரிவித்துள்ளன.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மீளெ ழுச்சிக்காக ஒன்றிணைவோம் என்ற கருப்பொருளில்

11

# அரச ஊழியர் 2.9 வீதத்தால் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை 08

2022ஆம் ஆண்டை விட 2023ஆம் ஆண்டில் அரச துறையில் பணியாற் றும் மொத்த ஊழியர்க ளின் எண்ணிக்கை 2.9 சதவீதம் குறைந்துள்ளது என்று நிதியமைச்சு வெளியிட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

2023 இறுதிக்குள், அரச துறையில் பணி புரிந்த மொத்த ஊழியர்க ளின் எண்ணிக்கை 13 இலட்சத்து 53 ஆயிரத்து 860 ஆகும்.

புதிய ஆட்சேர்ப்பு களை தற்காலிகமாக நிறுத் துதல், புதிய பணியிடங் களை உருவாக்குதல், ஒய்வு பெறுதல் ஆகி யவை ஊழியர்க ளின் எண்ணிக்கை

11



# சம்பந்தனின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்

திருகோணமலை, ஜூலை 08

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் நேற்று மாலை தீயுடன் சங்கமமானது.

கடந்த ஜூன் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கால மான இரா. சம்பந்தனின் பூதவுடல் திருகோணமலை யில் அவரின் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வெள் ளிக்கிழமை முதல் வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்றையதினம் அவரின் இல்லத்தில்

11

# அரச துறையின் மொத்த ஊதியத்துக்கு சமமாக ஆயுதப் படைகளின் சம்பளம்!

கொழும்பு, ஜூலை 08

அரசாங்கம் கடந்த ஆண்டு ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கிய ஊதியத்துக்கு சமமான தொகையை ஆயுதப் படைகளுக்கு மட்டும் சம்பளமாக வழங்கியுள் ளது.

இலங்கை மத்திய வங் கியின் அறிக்கை மூலம் இது வெளிப்பட்டுள்ளது.

அரசின் ஏனைய துறை களை சேர்ந்த ஊழியர்க ளுக்கு கடந்த ஆண்டு 32 ஆயிரத்து 729 கோடி ரூபாய் ஊதியமாக வழங் கப்பட்டது. இதேசமயம், ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு ஊதிய மாக 31 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவி டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு படை கள் மற்றும் பொலிஸா ருக்கு வழங்கப்பட்ட சம்பளம் அரச சேவை யின் ஊதியத்தில் 33 சதவீதமாகும்.

கடந்த ஐந்து

11

# தலைவருக்கும் எனக்குமிடையே சிறிய பிரச்னையே ஏற்பட்டது!

## இப்படி சொல்கிறார் கருணா

மட்டக்களப்பு, ஜூலை08

"தலைவருக்கும் கருணா அம்மானுக்கும் இடையே நடந்தது ஒரு சிறிய பிரச்னை - பேச்சின் அடிப்படையில் ஏற் பட்ட பிரச்னை. அதனை சிலர் பூதாகரமாக்கி வரு கின்றனர்", - இவ்வாறு கருணா என்று அறியப் பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய சுதந்திர முன் னணி தலைவரான அவர் நேற்று மட்டக்களப்பு - கல்லடியில் உள்ள கட்சி யின் தலைமை பணி மனையில் முன் னாள்

11

# பொலிஸ் அதிகாரம் இல்லாமல் அதிக அதிகாரப் பரவலாக்கம்!

## சம்பந்தனின் இறுதி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 08

பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13 ஆவது திருத்தத் தின் கட்டமைப்புக்கு அதிகபட்ச அதிகாரத்தை பரவ லாக்குவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மறைந்த ஆர். சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மாத்திரமின்றி ஒட்டு மொத்த இலங்கை மக்களின் உரிமைகளுக்காகவும்

11

# சம்பந்தனின் இலட்சியத்தை அடைவதற்காக இணையுங்கள்

## இறுதிநிகழ்வில் தலைவர்கள் உரை

திருகோணமலை, ஜூலை 08

இரா. சம்பந்தனின் இறுதிக் கிரியை நிகழ்வு நேற்று திருகோணமலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்ற முக்கிய தலைவர்களின் உரைகளின் சாரம சம் வருமாறு,

**அண்ணாமலை**

**பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர்**

சம்பந்தன் முக்கிய நோக்கத்துக்காக வாழ்ந்து மறைந்திருக்கிறார். அந்த நோக்கம்

11

# 46/1 தீர்மானத்தை நீடிப்பதற்கு மனித உரிமை பேரவை திட்டம்?

கொழும்பு, ஜூலை 08

நாட்டில் இந்த ஆண்டு தேர்தல்கள் நடைபெறவிருப் பதால் எதிர்வரும் செப்ரெம்பரில் ஆரம்பமாகவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர் பில் புதிய பிரேரணைக்கு பதிலாக, கடந்த 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிப்பது குறித்து ஜெனிவா ஆராய்வதாகக் கூறப்படுகின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட் டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பரில் ஆரம்ப மாகிறது.

இதன்போது, இலங்கை தொடர்பில் கடந்த

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தொலைபேசி அழைப்பில் வருகின்ற ஒவ்வொருவரும் கேட்கின்ற கேள்வி ஒன்றுதான்.

"அந்த டாக்டரின் வீடியோவை (காணொலி) பார்த்தீரகளா? என்னதான் நடக்கின்றது யாழ்ப்பாணத்தில்?".

டாக்டர் ஏதோ செய்ய நினைக்கின்றார், அதற்கு யாரோ தடையாக இருக்கிறார்கள் என்பதுதான் அந்த காணொலியை பார்க்கின்ற ஒவ்வொருவர் மனதிலும் ஏற்படும். ஆனால், அதில் யார் சரி, யார் பிழை என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய இந்த ஊர்க்குருவி இன்னமும் முயற்சி செய்யவில்லை.

ஓர் ஒழுங்கையினூடாக பிரதான வீதியை அடையும் மோட்டார் சைக்கிள் செலுத்துநர், பிரதான வீதியில் ஏறி தான் போகவேண்டிய பக்கத்துக்கு எந்தவித முன் எச்சரிக்கையும் இன்றி போய்க்கொண்டிருப்பார். பிரதான வீதியால் வந்துகொண்டிருக்கின்ற வாகன சாரதிகள் தான், ஒழுங்கையூடாக யாராவது வருகிறார்களா என்று பார்த்துப் போகவேண்டும்.

யுத்தம் நடந்துகொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் சில நூறு வாகனங்களே இருந்தன. அப்போது ஓடிப்பழகியவர்கள், யுத்தம் முடிந்த பல வருடங்களின் பின்னரும், பல இலட்சம் வாகனங்கள் ஓடித்திரிகின்றபோதும் பழைய ஞாபகத்திலேயே இப்போதும் ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

இதுபோலத்தான், ஒவ்வொரு துறையும். அவை சரியோ பிழையோ பழக்கப்பட்டுவிட்டன. அது பிழையானதாக இருந்தாலும் அதனை எடுத்த எடுப்பில் மாற்றியமைத்துவிட முடியாது.

டாக்டர் செய்ய நினைப்பது நல்ல காரியமாக இருக்கலாம். ஆனால், அவர் அதனை செய்வதற்கும் சில வழிமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும். நான் சொல்வது சட்டத்திலோ அல்லது திணைக்களங்களின் "சேர்க்குலர்"களிலோ இருப்பதை அப்படியே ஒரேநாளில் செய்துவிட முடியாது என்பதே. இதே வேளை, காணொலி பதிவின் மூலம் இந்தப் பிரச்னையை பொதுவெளிக்கு எடுத்துவர அந்த டாக்டர் முயன்றதும் - மக்கள் மத்தியில் தனக்கு அனுதாபத்தை திரட்ட முயன்றதும் - சற்று அவசரப்பட்டுவிட்டாரோ என்று யோசிக்க வைக்கின்றது.

மருத்துவத்துறையில் நிர்வாக கல்வியையும் கற்ற ஒரு டாக்டருக்கு இவை தெரியாததாக இருக்காது.

இந்த விடயத்தை அறிந்ததும், சாவகச்சேரியை சேர்ந்த ஒரு நண்பரிடம் கேட்டேன், "உங்கள் ஊரில் என்னதான் நடக்கின்றது?" என்று. அதற்கு அவர் ஒரு குட்டிக் கதை ஒன்றை மட்டும் பதிலாக அனுப்பியிருந்தார். அவர் அனுப்பிவைத்த கதைதான் இது.

அது ஒரு முதலை குளம். மிகவும் அமைதியாகவே இருந்தது. அவ்வப்போது நீர்அருந்த வரும் விலங்குகளை திடீரென பாய்ந்து விழுங்கிய பின்னர் ஆழத்துக்கு சென்றுவிடும் முதலைகளும், அமைதியாகும் குளமும் தொடர்ந்தபடியே இருந்தன.

இந்த அநியாயங்களை அவதானித்து வந்த குரங்கு குட்டி ஒன்று அந்த குளத்தின் அபாயத்தையும் உயிர்கொல்லும் முதலைகளையும் வெளிக்கொணர விரும்பி அருகில் இருந்த ஆலமரத்து விழுதுகளை பிடித்து குளத்தின் தண்ணீருக்கு மேலே ஆடத்தொடங்கியது.

குளத்தின் அத்தனை முதலைகளும் மூக்கை நீருக்கு வெளியே நீட்டி குரங்குக்குட்டியை கவ்வுவதற்காக மேலே வந்தன. சில முதலைகள் துள்ளிக்குதித்தும் ஆரவாரம் செய்தன.

இப்போது குளத்தை சுற்றி அனைத்து விலங்குகளும் கூடிவிட்டன. ஒரே ஆரவாரம். விழுதுகளில் தொங்கியபடி குரங்கும், துள்ளிக்குதித்தபடி முதலைகளும் வேடிக்கை பார்த்து விமர்சித்தபடி சுற்றிநின்ற மிருகங்களுமாக குளத்தடியில் ஒரே ஆரவாரம்.

குரங்குக்கு எதற்கு வேண்டாத வேலை என சிலதும் இத்தனை பெருத்த முதலைகள் இத்தனை நாளும் என்ன என்னத்தை எல்லாம் விழுங்கித் தொலைத்திருக்குமோ என்று சிலதும் மாறி மாறி பேசிக்கொண்டன. சிங்கம், புலி, யானை என எல்லா விலங்குகளும் முதலைகளை பார்த்தபின்பும் எந்த மிருகமும் முதலைகளை அழிக்க முன்வரவில்லை. காரணம், தண்ணீரில் முதலைகளின் பலத்தை உணர்ந்ததாலோ என்னவோ..!

இப்போது குரங்கு குட்டியின் நிலையும் கவலைக்கிடம். தொங்கிய விழுதில் பிடித்திருந்த கைகள் வலிக்க, பாய்ந்த முதலை ஒன்றின் பல்லில் வால் சிக்க பரிதாப நிலையில்.

குளத்தின் ஆபத்தை உலகுக்கு உணர்த்த முயற்சித்த குரங்குக் குட்டிக்கு உயிரைத் தியாகம் செய்யவேண்டிய நிலை.

தொடரும் காட்சியில் ஏதோ ஒரு முதலைக்கோ அல்லது முதலைகளுக்கோ இரையாகிப் போக, முதலைகள் மீண்டும் ஆழம் சென்று உரு மறைந்துக் கொள்ளும். குளமும் அமைதி யாகும். மிருகங்கள் பாவம் நல்ல குரங்குக் குட்டி அநியாயமாக செத்துவிட்டதே என்று சிலதும் - பயங்கரமான முதலைகள் என்று சிலதும் பேசிக் கொண்டு கலைந்து செல்லும்.

கொஞ்ச நாளைக்கு தாகம் எடுத்தாலும் தண்ணிகுடிக்க குளத்துக்கு போவதை தவிர்க்கும். நாட்கள் நகர எல்லாம் மறந்து போகும். ஆனால், குளம் தேடி வரும் மிருகங்களை குதற குதற கடித்துவிழுங்க தொடர்ந்தும் குளத்தின் அடியில் காத்திருக்கும் முதலைகள். குட்டிகளையும் போட்டு குடும்பமாக.

இந்த முதலைக்குளம் சாவகச்சேரியில் இல்லை.

இதுவே நண்பர் அனுப்பி வைத்த குட்டிக்கதை.

இதில் முதலைகள் யார், குரங்குக் குட்டி எது என்பதையெல்லாம் கண்டுபிடிக்கின்ற வேலையை வாசகர்களிடமே விட்டுவிடுகின்றேன்.

- ஊர்க்குருவி.

## இரா.சம்பந்தனின் இறுதிப் பயணத்தில்...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.07.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆனி 24
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் செயலில் காண்பிக்க வேண்டும்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரின் இறுதி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குகொண்டிருந்தார். சம்பந்தன் ஒருபோதும் நாட்டை துண்டாக்கும் முயற்சியை ஆதரித்தவரல்ல என்று குறிப்பிட்டதுடன் கூடவே, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை ஒருபுறமாக வைத்துவிட்டு, ஏனையவற்றை அமுல்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் ரணில் முன்னரும் பேசியிருக்கின்றார்.

ரணில் கூறுவது உண்மையென்று எவ்வாறு ஒருவர் நம்பமுடியும்? ரணில் தற்போது நிறைவேற்று அதிகாரமுள்ள ஒரு ஜனாதிபதி. அவரால் பல விடயங்களை செய்ய முடியும். ஆனால், அவர் எதனையும் செய்யவில்லை. சம்பந்தனுக்கான அஞ்சலி உரையில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசும் ரணில் எதற்காக ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமென்னும் நம்பிக்கையை சம்பந்தனுக்கு வழங்க வேண்டும்?

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசித்தானே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஏமாற்றப்பட்டனர். அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதன் ஊடாகத்தான் அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல முடியும் - அதுதான் அரசாங்கத்தின் திட்டம் என்றால் எதற்காக புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்டது?

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலாக அமுல்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தது. பாராளுமன்ற பலத்தைக் கொண்டு சாதாரணமாக அதனைச் செய்திருக்க முடியும். ஆனால், அது பற்றி ஒரு சிறு உரையாடல்கூட நடைபெறவில்லை - ஏன்? இது யாருடைய தவறு?

கூட்டமைப்பின் தவறா அல்லது புதிய அரசியல் யாப்புக்கான அரசியல் சூழல் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டே ரணில் தரப்பு சம்பந்தனை ஏமாற்றியதா? ரணில் இன்று கூறும் விடயங்களின் அடிப்படையில்தான் இவ்வாறானதொரு கேள்வியை கேட்க வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கான வியூகங்களை வகுத்துவரும் ரணில் விக்கிரமசிங்க தற்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசுகின்றார் - அப்போதும் கூட, மிகவும் கவனமாக பொலிஸ் அதிகாரம் இல்லாத அமுலாக்கம் தொடர்பிலேயே பேசுகின்றார்.

ஏனெனில், பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தென்னிலங்கை கடும்போக்கு தரப்புகள் எதிர்ப்புணர்வுடன் இருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டுதான் ரணில் பொலிஸ் அதிகாரத்தை ஒரு புறமாக வைப்போம் என்கிறார். ரணில் எதனையும் பேசலாம். ஆனால், அவர் செய்வார் என்பதை மற்றவர்கள் நம்ப வேண்டுமாயின், முதலில் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களை அவர் செயலில் காண்பிக்க வேண்டும்.

# உடற்கூற்றியல் விநாடி வினா போட்டி: யாழ். பல்கலைக்கழகம் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 08

மருத்துவ பீடங்களுக்கு இடையிலான உடற்கூற்றியல் விநாடி வினா போட்டியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இலங்கை உடற்கூற்றியல் சமூகத்தின் வருடாந்த அமர்வின் ஒரு பகுதியாக இந்த உடற்கூற்றியல் விநாடி வினா போட்டி இரண்டாவது ஆண்டாக நடத்தப்பட்டது.

இரு பகுதிகளாக நடைபெற்ற இப்போட்டியில் 10 அணிகள் பங்கேற்றன. முதல் பகுதி முடிவில் மூன்று சிறந்த அணிகளாக யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களின் மருத்துவபீட அணிகள் தெரிவாகின.

இந்த அணிகளிடையே இறுதி சுற்றுப் போட்டி கடந்த ஜூன் 30ஆம் திகதி இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், கொழும்பு மருத்துவ பீட அணி முதலாம் இடத்தையும் யாழ்ப்பாணம் மருத்துவபீட அணி இரண்டாம் இடத்தையும் பேராதனை மருத்துவபீட அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.



யாழ். மருத்துவ பீட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விநாயகமூர்த்தி திவாகரன், சிறிஸ்கந்தராஜா லக்சன், அஸ்லாம் பாத்திமா ஹம்தா, யுதாரா ரண்லினி ரணசிங்க ஆகியோர் போட்டியிட்டனர்.

இந்த மாணவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான சிவநந்தினி உதயகுமார், துரைரட்ணம் செந்தூரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் யாழ். மருத்துவ பீட உடற்கூற்றியல் துறை வளவாளர்கள் வழங்கியிருந்தனர்.

(ஐ)

# அனைத்து விமானங்களையும் சேவையில் ஈடுபடுத்துவோம்!

## சிறீ லங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, ஜூலை 08

சிறீலங்கன் எயார் லைன்ஸ் இந்த ஆண்டு இறுதிக்குள் தனது முழு விமானங்களையும் சேவையில் ஈடுபடுத்தும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் எயார்பஸ் ஏ32 விமானங்கள் இயந்திரங்கள் கிடைக்காததால் சேவையில் ஈடுபவதில்லை. அவை தற்போது திருத்தப்படுகின்றன.

இதனால், இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையான விமானங்களின் சேவையை செயல்படுத்த எதிர்பார்ப்பதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், அடுத்த ஆண்டு இறுதிக்குள் தனது விமானங்களின் எண்ணிக்கையை 27ஆக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறீ லங்கன் எயார்லைன்ஸிடம் தற்போது 21 எயார்பஸ் விமானங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு துறைமுக முதலீடு 3 கோடி டொலரால் குறைகிறது

கொழும்பு, ஜூலை 08

சீனா மெர்ச்சண்ட்ஸ் போர்ட் நிறுவனம் கொழும்பு துறைமுக கொள்கலன் மையத்துக்கான தமது முதலீட்டு தொகையை 3 கோடி டொலர் களால் குறைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த நிறுவனமே "கொழும்பு இன்ரர்நஷனல் கென்டெய்னர் ரெர்மினல்ஸ் லிமிற்றெட்ன்" கட்டுப்பாட்டு பங்குகளை கொண்டுள்ளது.

முன்னதாக அதன் முனையத் திறனை விரிவுபடுத்துவதற்காக 9 கோடி அமெரிக்க டொலர்களை நிறுவனம் முதலீடு செய்ய விருந்தது.

எனினும், இலங்கைத் துறை முக அதிகாரசபை, முனை யத்தை விரிவுபடுத்த இடம் வழங்க முடியாது என்று கூறியதை அடுத்தே இந்த முதலீட்டு குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2020 ஒக்ரோபரில் 9 கோடி அமெரிக்க டொலர் முதலீட் டில் கொழும்பு துறைமுகத்தில் திறனை விரிவுபடுத்துவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை முதலில் ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 08 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆனி 24
நல்ல நேரம் : 11.58 - 01.28
ராகு காலம் : 07.28 - 08.58
திதி : திருதியை




**மேடம்** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**இடபம்** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். சொத்துப் பிரச்னைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும். நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மிதுனம்** கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது நல்லது. திடீர் பணவரவு உண்டு. உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**கடகம்** வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அவ்வப்போது டென்ஷன் ஆவீர்கள். தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதரர் வகையில் மனத்தாங்கல் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். உத்தியோ கத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்** உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உற்சாகமான நாள்.

**தனுசு** பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்கவேண்டிவரும். மற்றவரிடம் வெளிப்படையாக பேசுவதாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்** சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவிகளை நாடுவீர்கள். அமோகமான நாள்.

**மீனம்** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்க தொடங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

# தமிழக அரசின் தோல்வியை வெளிப்படுத்திய படுகொலை

## எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்

சென்னை, ஜூலை 08
காங்கிரஸ், அ. தி. மு. க. நிர்வாகிகள் படுகொலை செய்யப்பட்ட நிலையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டிருப்பது தமிழக அரசின் தோல்வியைக் காட்டுகிறது. இதற்கு சட்டம் ஒழுங்கைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் மு. க. ஸ்டாலின் பொறுப்பேற்க வேண்டும். வழக்கை சி. பி. ஐ. வசம் ஒப்படைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தொடர்ச்சியாக குற்றங்கள் நடைபெறும் அவல நிலைக்குச் சட்டம் ஒழுங்கைத் தள்ளிய முதல்வருக்கு எனது கடும் கண்டனம். அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படுவதை முதல்வர் உறுதி செய்ய வேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி குறிப்பிட்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கை சீர்குலைத்துவிட்டு, மாநிலத்தின் முதல்வராகத் தொடரும் தார்மிக உரிமை தனக்கு இருக்கிறதா? என்று மு. க. ஸ்டாலின் தன்னையே கேட்டுக்கொள்ள வேண்டுமென தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறினார்.

இதுபோன்ற கொடும் குற்றச்சம்பவங்கள் இனி நடைபெறாமல் இருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரமாக முன்னெடுக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் நடிகர் விஜய் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பாடசாலை பாடத்திட்டத்தில் பாரம்பரிய தற்காப்புக்கலை

## தமிழக அரசுக்கு ஆளுநர் ஆலோசனை



சென்னை, ஜூலை 08
பாடசாலை மற்றும் உயர் கல்லூரி பாடத்திட்டங்களில் சிலம்பம், களரி உள்ளிட்ட பாரம்பரிய தற்காப்புக் கலைகளை உள்ளீர்க்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு ஆளுநர் ஆர். என். ரவி ஆலோசனை வழங்கியுள்ளார்.

"எண்ணி துணிக" என்ற தலைப்பில் பாரம்பரிய தற்காப்புக்கலை ஆசான்களுடனான கலந்துரையாடல் ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. இதில் வாள்வீச்சு, மான் கொம்பு, சிலம்பம், குத்து வரிசை, களரி ஆகிய தமிழக பாரம்பரிய மற்றும் தற்காப் புக்கலை கலைஞர்கள் 50 பேருக்கு ஆளுநர் விருது வழங்கிக் கௌரவித்தார்.

"பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாரம்பரிய தற்காப்புக் கலைகளை இன்று வரை உயிர்ப்புடன் வைத்து இளைஞர்கள் அக்கலைகளை கற்க ஊக்கப்படுத்தி வரும் ஆசான்களைப் பாராட்டுகிறேன். நாம் எவ்வாறு நமது பாரம்பரியம், பண்பாடு மற்றும் இசையை நினைத்து பெருமைப்படுகிறோமோ, அதேபோன்று நமது பாரம்பரியக் கலைகளை எண்ணியும் பெருமைப்பட வேண்டும்"- என்றார். (எ)

# தி. மு. க. மற்றும் நாம் தமிழர் கட்சியினரிடையே மோதல்!

விழுப்புரம், ஜூலை 08
விக்கிரவாண்டி இடைத் தேர்தல் பிரசாரத்தின்போது தி. மு. க., நாம் தமிழர் கட்சியினரிடையே மோதல் ஏற்பட்டு பொலிஸார் முன்னிலையிலேயே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மொத்தம் 29 வேட்பாளர்கள் களத்தில் இருந்தாலும், தி. மு. க., பா. ம. க., நாம் தமிழர் கட்சியினர் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட தொரவி, பனையபுரம், அசோகபுரி உள்ளிட்ட இடங்களில் திறந்தவெளி வாகனத்தில் வாக்குச் சேகரித்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா, எதிர்த்திசையில் ஏராளமான பெண்களுடன் வாக்குச் சேகரித்தபடி வந்த தி. மு. கவினரையும், அவர்களுடன் சென்ற பெண்களையும் பார்த்து சரமாரியாக கேள்விகளை எழுப்பினார். இந்த நிலையில் இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. (எ)

# ஆம்ஸ்ட்ராங் படுகொலை; 11 பேர் கைது

சென்னை, ஜூலை 08
பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழகத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சாமுண்டி சிற்பம் கண்டெடுப்பு



விருதுநகர், ஜூலை 08
திருச்சுழி அருகே 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சாமுண்டி சிற்பம் கண்டெடுக்கப்பட்டது.

சப்தமாதர்களில் ஒருவராக சாமுண்டி கருதப்படுகிறார். இவர் ருத்ரனின் அம்சம். இந்த சிற்பம் 3 அடி உயரத்தில், 4 கரங்களுடன் செதுக்கப்பட்டுள்ளது. அந்த 4 கரங்களில் சூலம், உடுக்கை, கபாலம், பாம்பு உள்ளன.

மார்பில் கபால மாலையுடனும், ஒரு காலை மடக்கி மற்றொரு காலை தொங்கவிட்டு சுகாசனக் கோலத்தில் அமர்ந்த நிலையிலும் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

மேலும், தலைப்பகுதி கிரீடம் தரித்தும், கிரீடத்துக்கு [illegible] காணப்படுகிறது. சிற்ப வடிவமைப்பை வைத்துப்பார்க்கும் போது 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட, பிற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (எ)

# பழைய முகங்களை ஓரங்கட்டும் பா. ம. க.


விழுப்புரம், ஜூலை 08
பா. ம. கவின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் பழைய முகங்களாகிப் போனதால் மருமகளையும் பேர்த்தியையும் பிரசாரத்தில் இறக்கியுள்ளார் பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறியுள்ளார்.

தமிழக முதல்வரின் திட்டத்தால் ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்றுள்ளது. எனவே, விக்கிரவாண்டியில் பதிவாகும் வாக்குகளில் 80 சதவீத வாக்குகளை தி. மு. க. பெறும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் தொழில் கட்சியின் ஆட்சி; ஈழதமிழர்களுக்கு நன்மை அளிக்கும்!

## விக்னேஸ்வரன், சிறீதரன் நம்பிக்கை




யாழ்ப்பாணம், ஜுலை 08

**பிரிட்டன் பொதுத்தேர்தலில் தொழிற்கட்சியின் அமோக வெற்றி ஈழத்தமிழர் நலனில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். எதிர்வருங்காலங்களில் இனப்படுகொலை, மனித உரிமைகள் மீறல் தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன முன்னேற்றகரமான மட்டத்தை நோக்கி நகரும் எனவும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.**

தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் விக்னேஸ்வரன் எம்.பி.

"ஆங்கிலேயர்கள் இலங்கையைவிட்டு வெளியேறிய போது, வடக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்களை கருத்தில்கொண்டு நியாயமான தோர் அதிகாரப் பகிர்வை வழங்காததன் காரணமாக, இவ் விடயத்தில் அவர்கள் பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே எதிர் வருங்காலங்களில் தொழிற் கட்சி தலைமையிலான அரசாங்கம் தமிழ்மக்களின் நலனை முன்னிறுத்தி குரலெழுப்பும் என நம்புகின்றேன்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர்மாதக் கூட்டத்தொடரிலும், அதன் பின்னரும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை இலக்காகக்கொண்ட செயற்பாடுகளை அவர்கள் முனைப்புடன் முன்னெடுக்க வேண்டும்" - என்றார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் சிறீதரன் எம். பி.,

தொழிற்கட்சி உறுப்பினர்கள் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் சார்ந்து அக்கறையுடன் கருத்துக்களை வெளியிட்டுவந்திருப்பதால் இனப்படுகொலை தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நீதி என்பன எதிர் வருங்காலங்களில் முன்னேற்ற கரமான நிலையை நோக்கி நகரும்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பிரித்தானிய உயர்ஸ் தானிகரை சந்தித்தபோது அரசியல் தீர்வு குறித்த அவரது கேள்விக்கு, "சமஷ்டி அடிப் படையிலான நியாயமான தீர்வு அவசியம்" எனத் தான் பதிலளித்தார் என்றும் அதனை அவர் கரிசனையுடன் கேட்டார். ஆகவே, எதிர்வருங்காலங்களில் சர்வதேச விசாரணையை ஊக்குவிக்கும் வகையிலும், இலங்கை தொடர்பான தீர்மானத்தைப் பாதுகாப்புச்சபைக்குக் கொண்டுசெல்லும் விதமாகவும் பிரிட்டன் நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ஐ)

# கனடா செல்ல முயன்ற யாழ். இளைஞர் கைது!

கொழும்பு, ஜுலை 08

போலி ஆவணங்களை பயன்படுத்தி கனடா செல்ல முயன்ற யாழ். இளைஞர் கட்டுநாயக்காவில் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைதானவர், நேற்று முன் தினம் இரவு சவூதி அரேபியா நோக்கி செல்லவிருந்த சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் செல்வதற்காக வந்த போதே கைது செய்யப்பட்டார்.

கைதானவரின் கடவுச்சீட்டு, கனடா வீசா என்பன இன்னோர் இலங்கையருக்கு சொந்தமானவை என்பது கண்டறியப் பட்டது.

தரகர் ஒருவருக்கு 18 இலட்சம் ரூபாய் வழங்கி தகவல்களை போலியாக இணைத்து இந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டமை விசாரணையில் தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கா விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# குடத்தனையில் வாளுடன் இளைஞர் ஒருவர் கைது!

வடமராட்சி, ஜுலை 08

வாளுடன் இளைஞர் ஒருவரை வடமராட்சி கிழக்கு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு - குடத்தனை - மாளிகைத்திடல் கிராமத்தை சேர்ந்த இளைஞரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான இளைஞர் வாள் வெட்டு சம்பவங்கள் மற்றும் மக்களை அச்சுறுத்திய சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம், கைதான இளைஞர் பிடியாணை பிறப்பிக்கப் பட்டவராவார். இவர், வீட்டிலிருந்த சமயம் தகவலறிந்த பொலிஸார் வெளிக்கிழமை அவரை கைது செய்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ - 02)

# இந்திய மீனவர்களுடன் கைதான இலங்கையர்களுக்கு தனி வழக்கு

யாழ்ப்பாணம், ஜுலை 08

வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அண்மையில் கைதான 22 இந்திய மீனவர்களில் இரண்டு இலங்கையர்களுக்கு எதிராக தனித்தனியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

இதன்போது, 1997ஆம் ஆண்டு யுத்தம் உச்சக்கட்டத்தின் போது நாட்டை விட்டு வெளியேறிய இலங்கை பிரஜைகள் இருவரும் இராமேஸ்வரம் மண்டபம் அகதி முகாமில் தஞ்சமடைந்தனர். இலங்கையர் இருவரும் இந்திய இழுவை படகில் தினக்கூலிகளாக பணி புரிந்து கொண்டிருந்த போது, அவர்களது படகு வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்தமைக்காக கடந்த 22ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் இந்திய மீனவர்களுக்கு எதிராக மீன்பிடி திணைக்களம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. இதேவேளை திணைக்களத்தால் வழங்கப் பட்ட சட்டப்பூர்வ மீன்பிடி அனுமதிப்பத்திரம் இன்றி மீன் பிடியில் ஈடுபட்டமைக்காக இலங்கையர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இந்திய மீனவர்கள் பொதுவாக குறுகிய காவலில் இருக்கும் போது குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றம் அவர்களுக்கு இரண்டு வருட கடுங்காவல் சிறைத்தண்டனையை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்த பின்னர் விடுவிக்கப்படுவார்கள். எனவே, இலங்கையர்களை தவிர கைது செய்யப் பட்ட மீனவர்கள் அனைவரும் ஜுலை 18ஆம் திகதிக்குள் விடுவிக்கப்படுவர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# மாணிக்கக் கற்களை விற்க முயன்ற மூவர் கைதாகினர்!

மட்டக்களப்பு, ஜுலை 08

இரு மாணிக்கக் கற்களை விற்பனை செய்ய முயன்ற வாகரையை சேர்ந்த நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் வாகரையை சேர்ந்த 41 வயது நபர் மற்றும் குருநாகலை சேர்ந்த 35 வயது ஆண் மற்றும் 33 வயது பெண் என மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டதுடன் இந்த மோட்டார் சைக்கிள்கள் மேலதிக விசாரணைகளுக்காக நிக்கவரட்டிய வனஜீவராசிகள் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டன. (ஐ)

# உடற்கல்வி பாடங்களுக்கு ஒரு வருடம் தயவுக்காலம் வழங்குமாறு கோரிக்கை

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜுலை 08

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு உடற்கல்வி பாடங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு தயவுக்காலமாக ஒரு வருடத்தை வழங்குமாறு யாழ். மாவட்ட உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்த கடிதத்தில்,

தற்போது, தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு 2021, 2022ஆம் ஆண்டுகளில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

ஏனைய பாடங்கள் இசற்புள்ளி அடிப்படையில் உள்வாங்கப்படும் நிலையில் உடற்கல்வி பாடத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் நேர்முக பரீட்சையில் விளையாட்டு நிகழ்வில் பங்கேற்ற சான்றிதழ்களின் அடிப்படையில் உள்வாங்கப்படுகின்றனர்.

தற்போது கல்வியியல் கல்லூரிகளுக்கு உடற்கல்வி பாடத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களில் 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களின் சான்றிதழ் காலம் 2017.01.01 - 2021.12.31 வரையும், 2022 மாணவர்களின் சான்றிதழ் காலம் 2018.01.01 - 2022.12.31 வரையும் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்று பரவலால் 2020, 2021ஆம் ஆண்டுகளில் விளையாட்டு நிகழ்வுகள் பல நடைபெற வில்லை. எனவே, மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தற்போது கல்வியியல் கல்லூரிகளுக்கு உடற்கல்வி பாடத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களில் 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு சான்றிதழ்களையும் 2022 மாணவர்களுக்கு 2017 ஆண்டு சான்றிதழ்களையும் பயன்படுத்த ஒரு வருட மேலதிக தயவுக்காலத்தை வழங்க வேண்டும் எனக் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# ஒரு வாரத்தில் விபத்துகளால் 7 பேர் பலி; 53 பேருக்கு காயம்!

கொழும்பு, ஜுலை 08

கடந்த வாரம் நாடு முழுவதும் இடம்பெற்ற தொடர் விபத்துகளில் 7 பேர் உயிரிழந்தனர்.

பதுளையில் கெப் ரக வாகனம் கவிழ்ந்ததில் நால்வர் உயிரிழந்தனர். மூவர் காயமடைந்தனர்.

பண்டாரவளை நோக்கி சென் இ. போ. ச. பேருந்து வீதியை விட்டு விலகி ஏற்பட்ட விபத்தில் 5 பேர் காயமடைந்தனர்.

சிமெந்து ஏற்றிச் சென்ற லொறியும் இ. போ. ச. பேருந்தும் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

கண்டி - குருநாகல் பிரதான வீதியில் நுகவெல பாடசாலை சந்தியில் லொறி மோதிய விபத்தில் 7 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர். பரந்தன் - பூநகரி வீதியில் குடமுருட்டி பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. (ஐ)

# ரூ.10,500 கோடி திறைசேரி உண்டியல் ஏலத்தில்!

கொழும்பு, ஜுலை 08

10 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை மறுதினம் ஏலம் விற்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தை கொண்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 4 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலம் மூலம் விற்கப் படவுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் திணைக்கள ஊழியர்கள் இரு நாட்கள் வேலை நிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 08

**இன்றும் நாளையுமாக 48 மணி நேரம் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் தபால் திணைக்கள ஊழியர்கள் ஈடுபடவுள்ளனர்.**

ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், நேற்று மாலை 4 மணி முதல் மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையத்தில் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் ஏனைய அஞ்சல் நிலையங்களில் நள்ளிரவுவேளை தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்று கூறியிருந்தார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை முன் வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படுகிறது என்றும் அவர் மேலும் கூறியிருந்தார். (ஐ)

## முகத்துவாரத்தில் முதலைகள்; பொதுமக்கள் பெரும் அச்சம்!

கொழும்பு, ஜூலை 08

கொழும்பு 15, முகத்துவாரம் பகுதியில் வசிப்பவர்களிடையே முதலைகள் பரவலான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. முதலைகள் சிற்றோடையை சுற்றி வருவதையும் கால்வாயில் சுற்றித் திரிவதையும் காண முடிவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் .

இதுகுறித்து பிரதேச மக்கள் பல முறை முறைப்பாடு தெரிவித்தும் பல நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் சாடினர்.

"எங்கள் பாதுகாப்பு குறித்து நாங்கள் பயப்படுகிறோம், எங்கள் உயிருக்கு ஏதேனும் தீங்கு ஏற்படும் முன் இந்த முதலைகளை அப்புறப்படுத்த வேண்டும். எங்கள் பாதுகாப்பை உறுதி செய்ய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அரசாங்க சேவை ஊழியர்கள் நாளை விடுமுறை போராட்டம்!

கொழும்பு, ஜூலை 08

அரச சேவையில் பணியாற்றும் பல துறைகளை சேர்ந்த தொழிற்சங்க ஊழியர்கள் நாளை செவ்வாய்க்கிழமை சுகயீன விடுமுறை போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் இணைந்து கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ஐ)

## "இ. தொ. காவின் சிறுவர்கள் ஓரமாக விளையாட வேண்டும்!"

கொழும்பு, ஜூலை 08

எனக்கு எதிராக சில மலையக நகரங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிறுவர் பிரிவினர் ஆர்ப்பாட்டம் செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், சிறுவர்கள், போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் ஓரமாகப் போய் விளையாட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.



மேலும், பட்டாசு கொழுத்தி, மண் சோறு பொங்கி, குழந்தைகள் ஆர்ப்பாட்ட விளையாட்டு விளையாடட்டும். ஆனால், வீதி போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சல் இல்லாமல் ஓரமாக போய், விளையாட வேண்டும் என இந்த சிறுவர்களுக்கு அறிவுரை கூறுகின்றேன் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வேட்புமனு திகதியை அறிவிக்கும் அதிகாரம் 10 நாட்களில் எம்மிடம்!

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, ஜூலை 08

அடுத்த 10 நாட்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் எமக்கு கிடைக்கவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பின் பிரகாரம் செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 16ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

இவ்வாறான நிலையில் அடுத்த 10 நாட்களில் அதாவது ஜூலை 17ஆம் திகதி முதல் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி தேர்தலுக்காக 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படவுள்ளது. இதற்கான பணிகள் முழுமையடைந்துள்ள அடுத்து வரும் சில நாட்களில் மாவட்ட ரீதியில் அவை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதேநேரம் நாடளாவிய ரீதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களின் குறைபாடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள், தேர்தல்கள் கண்காணிப்பு தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு தயாராகுமாறு அரசாங்க செய்தித் தொடர்பாளர், பொலிஸ்மா அதிபர், இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் நீர் போக்குவரத்து சபை மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றுக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்பை விடுத்துள்ளோம்.

மேலும், இம்முறை பிரசார செலவீனங்கள் சம்பந்தமாகவும் அதீதமான கவனத்தை நாம் செலுத்தவுள்ளோம். அதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம். இதேநேரம், ஜனாதிபதியின் பதவிக்காலம் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள மனு தொடர்பிலும் நாம் கரிசனை செலுத்துள்ளோம் - என்றார். (ஐ)

## ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 11 இலங்கையர்கள் நாடு கடத்தல்!

கொழும்பு, ஜூலை 08

இணைய குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட 11 இலங்கையர்கள் நாடு திரும்பினர். இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இணையக்குற்றங்களில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான தெற்காசியர்கள் மற்றும் ஆபிரிக்கர்கள் ஐக்கிய அரபு இராச்சிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

அந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் 37 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது கண்டறியப்பட்டது.

பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் ஏனைய இலங்கையர்களும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு நாடு நாடுகடத்தப்படுவார்கள் எனத் தூதரகம் அறிவித்துள்ளது. (ஐ)

# கஜேந்திரகுமார் ஆதரித்திருந்தால் அதையும் ஏற்று ஆட்சி செய்திருப்பேன்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 08

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எனக்கு ஆதரவு வழங்கியிருந்தாலும் அதனையும் ஏற்றுக்கொண்டு நாட்டை ஆட்சி செய்திருப்பேன். நான் ராஜபக்ஷக்களின் நண்பன் அல்ல - இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து என்ன செய்கின்றீர்கள் எனப் பலரும் கேள்வி எழுப்புகின்றனர். 70 முதல் தாமும் மகிந்தவும் இரு வேறு திசைகளில் பயணித்தவர்கள். எப்போதும் எதிரிகளாகவே இருந்துள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் 27 ஆண்டு கால அரசியல் நிறைவை முன்னிட்டு நடந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டின் நெருக்கடியான நிலைமைகளில் மக்களின் நலனுக்காக ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன். ஆனால், நாட்டை எவ்வாறு நிர்வாகம் செய்ய வேண்டுமென மகிந்த தமக்கு அறிவுரை கூறவில்லை.

அரசாங்கம் கவிழும்போது மரபு ரீதியாக எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும். எனினும் சஜித் பிரேமதாச காணாமல் போய்விட்டார். பொறுப்பை ஏற்காது ஒளிந்து விட்டார். எதிர்க்கட்சித் தலைவரின் ஜனநாயக ரீதியான பொறுப்பை அவர் தட்டிக் கழித்துள்ளார். எனது நண்பர் அனுரகுமார திஸநாயக்க இந்தக் காலப் பகுதியில் எங்கிருந்தார் என யாருக்கும் தெரியாது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் நடக்காத விடயம் இலங்கையில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள எவரும் இருக்க வில்லை. பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அரசாங்கம் யாசகம் செய்தது. நானாக இந்தப் பதவியை கேட்க வில்லை, உண்மையில் சஜித் பதவியை ஏற்றுக் கொண்டிருந்தால் நான் அவருக்கு உதவியிருப்பேன். நாடு ஒன்று நெருக்கடியில் விழும்போது பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியமானது.

எவ்வளவு அடித்துக் கொண்டாலும் மாலை வேளைகளில் சந்திப்போம் - பேசுவோம். திருமண நிகழ்வுகளில் ஒன்றாக பங்கேற்றுள்ளோம். மொட்டு கட்சி மட்டுமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் எனக்கு வாக்களித்தனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எனக்கு ஆதரவு வழங்கியிருந்தாலும் அதனையும் ஏற்றுக் கொண்டு நாட்டை ஆட்சி செய்திருப்பேன்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பு என்னால் முடியும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும் அதன் காரணமாகவே இந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். மொட்டு கட்சியின் ஆதரவை நிராகரித்திருந்தால் இன்று டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 450 ரூபாய்க்கு மேல் சென்றிருக்கும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அடுத்த ஆண்டு முதல் முட்டைக்கும் வற் வரி!

## முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படுமென உற்பத்தியாளர்கள் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 08

**அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் முட்டைகளுக்கு 15 வீதம் பெறுமதிசேர் வரி (வற்) விதிக்கப்படும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச். எம். டி. ஆர். அழககோன் தெரிவித்துள்ளார்.**

இதனால் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கக் கூடும். நுகர்வோர் விவகார அதிகாரசபை முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்த போதிலும், நிர்ணயிக்கப்பட்ட விலையில் முட்டைகளை விற்பனை செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

ஜூலை 02 ஆம் திகதி முதல் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நுகர்வோர் விவகார அதிகாரசபை நிர்ணயித்தது. இதற்கமைய வெள்ளை முட்டை 43 ரூபாய் முதல் 47 ரூபாய் வரையிலும், சிவப்பு முட்டை 45 ரூபாய் முதல் 49 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் இதற்கு முன்னர் முட்டைக்கு அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் அது தோல்வியடைந்து.

விலையை குறைக்க வேண்டுமானால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஒரு தலைப்பட்சமாக விலை நிர்ணயம் செய்யாமல் 42 ரூபாய் முதல் 43 ரூபாய் வரையிலான விலையில் முட்டைகள் வெளியிடப்படும். 43 முதல் 47 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் முட்டைகளை விற்பனை செய்யப்பட வேண்டும். இந்த முறையால் விவசாயிகள் உற்பத்தியை கைவிடுவதால் மீண்டும் முட்டை தட்டுப்பாடு ஏற்படும்" - என்றார். (ஐ)

# வங்குரோத்தின் பின்னர் நாம் கடன் பெறவில்லை

## அமைச்சர் மனுஷ நாணயக்கார




கொழும்பு, ஜூலை 08

இலங்கை வங்குரோத்து நிலையை எதிர்கொண்டு எந்த நாட்டிடமும் கடன் பெறவில்லை என்பதைத் தெரிந்திருந்தும் நாட்டின் கடன் அதிகரித்துள்ளதாக எதிர்க் கட்சிகள் மக்களை ஏமாற்றி வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நாங்கள் வங்குரோத்து அடைந்த பிறகு எந்த நாட்டிடமும் கடன் பெறவில்லை. இருப்பினும், சில அரசியல்வாதிகள் கடன் அதிகரித்துள்ளதாக பகிரங்கமாக தெரிவிக்கின்றனர்.

எங்கள் கடன்கள் டொலர்களில் கூறப்படும்போது கடன் ஏற்ற இறக்கமாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் இவ்வாறு பொய் பிரசாரங்களை செய்து மக்களை தவறாக வழிநடத்துகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் போன்ற ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டமும் எதிர்க்கப்பட்டது. சந்திரிகா பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக இருந்தபோது, மொனாஷ் பல்கலைக்கழகம் இலங்கைக்கு வந்து ஆனால் தனியார் கல்வியை அனுமதிக்க முடியாது என்று கூறி அப்போது அனுமதிக்கப்படவில்லை.

அந்த பல்கலைக்கழகம் மலேசியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது இன்று அது மலேசியா பிராந்தியத்தில் ஒரு கல்வி மையமாக மாறியுள்ளது, இது பில்லியன் கணக்கான டொலர்களை வருவாயை ஈட்டுகிறது - என்றார். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதை ஏற்கமுடியாது!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 08

பொதுமக்களின் ஜனநாயக அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை மறுதலிக்கும் வகையில் ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதை அனுமதிக்கவே முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் உயர்நீதிமன்றில் முற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி வர்த்தகரான சமிந்திர தயான் லெனவ என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு வருகிறது.

இந்நிலையில், இதுபற்றி கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான விடயம் பொது மக்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தி அவர்களின் சுதந்திரமான தெரிவுகளுக்கு இடமளிப்பதாகும். அந்த வகையில் தொடர்ச்சியாக நாம் தேர்தல்களை எந்தவொரு காரணத்துக்காகவும் பிற்போடக்கூடாது என்பதை வலியுறுத்தி வந்துள்ளோம்.

மக்களின் இறைமை பாதுகாக்கப்படும் அதேநேரம், நாட்டின் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் நாம் தொடர்ச்சியாகவே இறுக்கமான நிலைப்பாட்டுடன் இருக்கின்றோம். அந்த வகையில், ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தையும் நாம் வன்மையாக கண்டிப்பதுடன் தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்வதற்காக செயல்படுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில், உயர்நீதிமன்றத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிப்பதற்கு கோரும் மனுவுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் முற்படும் - என்றார். (ஐ)

# சுற்றுலாவிகள் வருகை உயர்வு

கொழும்பு, ஜூலை 08

இந்தியா, பிரித்தானியா, சீனா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இலங்கை வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 4 நாட்களில் மாத்திரம் 21 ஆயிரத்து 298 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இதன்படி, இந்தியாவிலிருந்து 5 ஆயிரத்து 245 பேரும், பிரித்தானியாவிலிருந்து ஆயிரத்து 741 பேரும், சீனாவிலிருந்து ஆயிரத்து 422 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 10 இலட்சத்து 31 ஆயிரத்து 547 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தயாசிறி ஜயசேகர பொலிஸில் முறைப்பாடு!

கொழும்பு, ஜூலை 08

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தரப்பினருக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று ஞாயிற்றுக்கிழமை மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளராகக் கடமைகளை பொறுப்பேற்பதற்கு கொழும்பு - டார்லி வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்துக்கு நேற்றுமுன்தினம் தயாசிறி ஜயசேகர சென்றிருந்தார்.

எனினும், அவரை அங்கு நுழையவிடாமல் தடுக்கும் வகையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தரப்பினர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தைப் பூட்டியிருந்ததுடன், அவருக்கு இடையூறும் விளைவித்தனர் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பிலேயே தயாசிறி ஜயசேரக பொலிஸ் முறைப்பாடு அளித்துள்ளார். (ஐ)

# கதிர்காமத்தில் நீராடியவர் முதலை கடித்து உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 08

கதிர்காமம் - மாணிக்க கங்கையில் பாலம் அருகே நீராடிக் கொண்டிருந்தவர் முதலை கடித்து உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

முதலைக்கு இரையான நபரின் சடலம் பொலிஸார் மற்றும் வனஜீவிகள் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மீட்கப்பட்டது.

உயிரிழந்த நபரின் ஆள் அடையாள விவரங்கள் தெரியவரவில்லை. உயிரிழந்தவர், 30 - 35 வயது மதிக்கத்தக்கவர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# யானை குழப்பமடைந்ததால் கதிர்காமத்தில் 13 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 08

கதிர்காமம் கொடியேற்றத் திருவிழாவில் ஊர்வலத்தில் பங்கேற்ற யானை குழப்பமடைந்ததால் 13 பேர் காயமடைந்தனர்.

ஊர்வலமாக பங்கேற்ற போது ஏற்பட்ட அமளியால் யானை திடீர் குழப்பம் அடைந்தது. இதனால், அது அங்கு மிங்கும் ஓட ஆரம்பித்தது. இதன்போதே 13 பேரும் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கதிர்காமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனினும், காயமடைந்தவர்களுக்கு பாரதூரமான பாதிப்புகள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள்

# வடக்கு இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 08

இஸ்ரேலின் வடபகுதியில் ஹிஸ்புல்லா அமைப்பின் தாக்குதல்கள் அதிகரிப்பதால் அந்தப் பகுதியில் தங்கியுள்ள இலங்கையர்கள் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தவேண்டும் என இஸ்ரேலிய தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி ஒருவர் இஸ்ரேலில் தாக்குதலில் உயிரிழந்தார். இதையடுத்து, ஹிஸ்புல்லா அமைப்பினர் கடும் தாக்குதலை தொடுத்துள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளில் அந்தப் பகுதியில் காட்டுதீ பரவியுள்ளது. இந்த நிலையில் அங்கு தங்கியுள்ள இலங்கையர்கள் தங்கள் பாதுகாப்பு குறித்து தொடர்ச்சியாக கவனம் செலுத்தவேண்டும், அவசியம் ஏற்பட்டால் மாத்திரமே தாங்கள் பணிபுரியும் பகுதியிலிருந்து வெளியே செல்லவேண்டும் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வடபகுதியில் 2000 இலங்கையர்கள் பணிபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரே நாளில் பத்தாயிரம் பக்தர்கள் கானகத்துக்குள் பிரவேசித்தனர்!

## கந்தனைக் காண அலைமோதும் அடியார்கள்

உகந்தை, ஜூலை 08

**வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய ஆடிவேல் திருவிழாவுக்கான கொடியேற்றம் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இதன்போது, வழக்கத்துக்கு மாறாக சுமார் பத்தாயிரம் பக்தர்கள் கானகத்துக்குள் பிரவேசித்தனர்.**

இதேவேளை, கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழாவை முன்னிட்டு இம்முறை மேற்கொள்ளப்படும் பாதயாத்திரை வரலாறு காணாத வகையில் உள்ளது என ஆலய வண்ணக்கர் சுதுநிலமே சுதா தெரிவித்தார்.

வழமையாக பாதயாத்திரை ஆரம்பதினம் மற்றும் கொடியேற்றத் தினங்களில் சுமார் மூவாயிரம் அல்லது நாலாயிரம் பக்தர்கள் காட்டுக்குள் பயணிப்பார்கள்.

ஆனால், இம்முறை கடந்த 30ஆம் திகதி முதல் நாள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கானகப் பாதை திறந்து வைக்கப்பட்ட அன்றைய தினம் மட்டும் சுமார் 7,000 அடியார்கள் கானகத்துக்குள் பிரவேசித்தனர்.

இதேவேளை, வனஜீவராசிகள் திணைக்களப் பதிவின்படி நேற்று முன்தினம் மட்டும் 9,321 பக்தர்கள் காட்டுக்குள் பயணித்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 25,000 மேற்பட்ட பாதயாத்திரிகர்கள் கானகத்தினுள் பிரவேசித்து இருக்கின்றார்கள் எனவும் சுதுநிலமே தெரிவித்தார்.

அத்தோடு, ஆறு நாட்களாக கானகத்துக்குள் பயணித்து கதிர்காமக் கந்தன் ஆலயத்தை சுமார் பத்தாயிரம் பாதயாத்திரிகர்கள் வந்தடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இம்முறை வடக்கு - கிழக்கிலிருந்து சுமார் 10, 000 அடியார்கள் கொடியேற்றத்தில் கலந்து கொண்டார்கள். எதிர்வரும் 11 ஆம் திகதி வரை காட்டுப் பாதை திறந்திருக்கும்.

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர், கதிர்காமத்தை அடைந்து கதிரமலை ஏறி அவர்களது நேர்த்தியைப் பூர்த்தி செய்தனர்.

இன்னும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பாதயாத்திரிகர்கள் கானகத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இம்முறை பயணம் அனைவருக்கும் சாதகமாக அமைந்திருந்தது. காரணம் காலநிலை சிறப்பாக இருந்தது.

எனினும் இரண்டு இடங்களிலே பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் கணக்கெடுப்பு நடைபெறுவது பக்தர்கள் இடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# இடைவிலகிய மாணவர்களை மீண்டும் இணைக்கத் திட்டம்

கல்முனை, ஜூலை 08

கல்முனையில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் இணைக்கும் திட்டம் வெற்றியளித்துள்ளது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கட்டாயக் கல்விக் குழு, வலயக்கல்வி அலுவலகம், அம்பாறை மாவட்டச் செயலகம், கல்முனை பிரதேச செயலகம், கல்முனை தெற்கு பொதுச் சுகாதாரப் பணிமனை மற்றும் கல்முனை பொலிஸார், கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டமானது பாடசாலை அதிபர் ஏ. ஜி. எம். ரிஷாத் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்றது.

இதனடிப்படையில் இடைவிலகிய மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் சந்தித்து, உரையாடி அவர்களுடைய பிரச்னைகளை அறிந்து மீண்டும் பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொண்டனர்.

குடும்ப வறுமை காரணமாகவே அதிகளவான மாணவர்கள் பாடசாலை கல்வியை விட்டு இடைவிலகியுள்ளமை தெரியவந்துள்ளது. (எ)

# பண்டிகைக்கால கலாசார நிகழ்வு



கல்முனை, ஜூலை 08

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் தரம் - 02 மாணவர்களால் ஒழுங்கு படுத்தப்பட்ட புத்தாண்டு பண்டிகைக்கால கலாசார நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (எ)

# இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார் நாமல்



திருகோணமலை, ஜூலை 08

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

மறைந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டதுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. சம்பந்தனின் பூதவுடலுக்கு அரசியல்வாதிகள், பிரமுகர்கள் மற்றும் மக்கள் அஞ்சலி செலுத்தினர். (எ)

# காரைதீவில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி

காரைதீவு, ஜூலை 08

சீரற்ற காலநிலையால் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டம் காரைதீவில் 11 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலும் 19 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

இவ்வாறு வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டிருந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கான முற்பணத் தொகை 10, 000 ரூபாய் வழங்கும் நிகழ்வு, காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சசிந்திரன் தலைமையில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# பற் சிகிச்சை முகாம்

கல்முனை, ஜூலை 08

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் பற் சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பற் சிகிச்சை முகாம் நடைபெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஸஹீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் கல்முனை தெற்கு மருத்துவ அதிகாரி பணிமனையால் இந்த பற் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. (எ)






உகந்தைமலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் பெருந்திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேட்டோ நாடுகள் எல்லை மீறினால் விரைவில் அணு ஆயுத போர் மூளும்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை



மொஸ்கோ, ஜுலை 08


**உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி உதவி செய்வதில் நேட்டோ நாடுகள் தங்கள் எல்லையை மீறி விடக் கூடாது. ரஷ்யாவுடன் மோதல் ஏற்பட்டால் அந்தப் போர் விரைவில் அணு ஆயுதப் போராக மாறிவிடும்- இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த ரஷ்யா, கடந்த 2022 இல் அந்த நாடு மீது போர் தொடுத்தது. உக்ரைனை எளிதில் கைப்பற்றிவிடலாம் என நினைத்து போரை தொடங்கிய ரஷ்யாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருக்கிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள், நிதி உதவிகள் வழங்கி வருவதால் ரஷ்யாவுக்கு கடும் சவாலை உக்ரைன் ஏற்படுத்தி வருகிறது. இதனால் 2 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் போர் நீடித்து வருகிறது. இதனிடையே, இந்தப் . போரின் போக்கு தற்போது ரஷ்யாவுக்குச் சாதகமாக சென்று கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக இந்தப் போரில் தங்கள் இலக்கை எட்டுவதற்கு அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதற்கான தேவை இருக்காது என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார். அதே சமயம், ரஷ்யா அணு ஆயுதத்தை பயன்படுத்தாது என மேற்கத்திய நாடுகள் எண்ணுவது தவறு என்றும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்குவதில் நேட்டோ நாடுகள் தங்கள் எல்லையை மீறி விட வேண்டாம் என்று எச்சரித்துள்ள புடின், ரஷ்யாவுடன் மோதல் ஏற்பட்டால் அந்தப் போர் விரைவில் அணு ஆயுதப் போராக மாறி விடும் என்றும் எச்சரித்துள்ளார். (எ)



# ஈரான் ஜனாதிபதி தேர்தலில் மசூத் பெஸ்கியன் வெற்றி

தெஹ்ரான், ஜுலை 08

ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் மசூத் பெஸ்கியன் வெற்றி பெற்றுள்ளார்.

ஈரான் ஜனாதிபதியாக இருந்த இப்ராகிம் ரைசி, கடந்த மாதம் 19 ஆம் திகதி ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்ததையடுத்து, புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய கடந்த 28 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் 40 சதவீத வாக்குகள் அதாவது, 2. 55 கோடி வாக்குகள் பதிவாகின. அதிகபட்சமாக முன்னாள் நிதி அமைச்சர் மசூத் பெஸ்கியன் 42. 5 சதவீத வாக்குகள் பெற்றார். சயீது ஜலீலி 38. 6 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தார். இந்த முடிவுகளின்படி மசூத் பெஸ்கியன் அதிகபட்ச வாக்குகளை பெற்றிருந்தாலும், ஈரான் நாட்டின் சட்டத்தின்படி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற 50 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டியது கட்டாயமாகும்.

அவ்வாறு பெறாவிட்டால், முதல் இரண்டு இடங்களில் உள்ள வேட்பாளர்களுக்கு இடையே 2 ஆம் சுற்று தேர்தல் நடத்தப்படும். இந்த நிலையில் இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெற்றது. இதில், மசூத் பெஸ்கியன் வெற்றி பெற்றுள்ளார். (எ)

# கரைபுரண்டு ஓடும் ஆறுகள் 20 இலட்சம் மக்கள் பாதிப்பு

டாக்கா, ஜுலை 08

பங்களாதேஷில் கரைபுரண்டு ஓடும் ஆறுகளால் 20 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



பங்களாதேஷில் கோடைக்காலத்தில் பெய்யும் பருவ மழை, வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளால் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுகிறது. பருவ நிலை மாற்றம் காரணமாக அதிகப்படியான சீரற்ற மழைப்பொழிவு ஏற்படுகிறது. இமயமலையில் பனிப் பாறைகள் உருகி வெள்ளம் ஏற்படுகிறது.

இந்த வாரத்தில் பெய்த கனமழை காரணமாக முக்கிய ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. ஆற்றங்கரைகளில் மக்கள் வசிக்கும் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 8 பேர் உயிரிழந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் நாட்களில் மழை, வெள்ளம் இன்னும் அதிகமாகும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர். (எ)

# இஸ்ரேல் கொடூரத் தாக்குதல்

# 5 ஊடகவியலாளர்கள் உட்பட 29 பேர் காஸாவில் உயிரிழப்பு

காஸா, ஜுலை 08

காஸா மீதான இஸ்ரேலின் கொடூரத் தாக்குதலில் நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் ஐந்து பலஸ்தீன ஊடகவியலாளர்கள் உட்பட 29 பேர் உயிரிழந்தனர் என்று காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காஸா மருத்துவமனைகளில் எரிபொருள் நெருக்கடி நிலவி வரும் நிலையில், மருத்துவமனைகளுக்குள் பல துறைகளில் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஜுன் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை மற்றும் வெளியேற்ற உத்தரவைத் தொடர்ந்து கிழக்கு காஸா நகரத்திலிருந்து சுமார் 80, 000 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ. நா. அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் காஸா மீதான இஸ்ரேலின் போரில் 38, 098 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 87, 705 பேர் காயமடைந்தனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களால் இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, ஆயிரக்கணக்கான மக்கள் காஸாவில் இன்னும் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மூன்று மனிதர்கள், ஒரு பன்றி குகை ஓவியம் கண்டுபிடிப்பு

ஜகார்த்தா, ஜுலை 08



இந்தோனேசியாவில் குகை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று மனிதர்கள், ஒரு பன்றியின் உருவத்தை ஒத்த உலகின் மிகப் பழமையான ஓவியங்கள் பண்டைய மனிதர்களின் சிந்தனை, வாழ்க்கை முறையை இன்றைய தலைமுறை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பின்னை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

இந்தோனேசியாவின் தெற்கு சுலவேசியின் மரோஸ் பாங்கெப் பகுதியில் உள்ள லியாங் கரம்புவாங்கின் சுண்ணாம்புக் குகையில் 51, 200 ஆண்டுப் பழமையான ஓவியங்களை அவுஸ்திரேலியா, இந்தோனேசியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது, இதற்கு முன்னர் கண்டறியப்பட்ட பழமையான குகை ஓவியத்தைவிட 5,000 ஆண்டுகள் பழமையானது.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள தேசிய ஆராய்ச்சி கண்டுபிடிப்பு நிபுணர்களில் ஒருவரான அகஸ் ஒக்டாவியானா தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழுவினர் இக்குகை ஓவியத்தை கண்டறிந்துள்ளனர். இக்குகை ஓவியத்தில் ஒரு பன்றியின் உருவத்துடன் மூன்று மனித உருவங்களும் இடம்பெற்றுள்ளன.

# சீனாவின் 2ஆவது மிகப்பெரிய ஏரியின் அணை உடைந்தது!


பீஜிங், ஜுலை 08

சீனாவில் உள்ள இரண்டாவது மிகப்பெரிய ஏரியின் அணை திடீரென உடைந்தது. இதனால் 5,700 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனையடுத்து அங்குள்ள மிலோ ஆற்றில் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அ வுக்கு நீர்மட்டம் உயர்ந் துள்ளது. இதனால் ஆற்றங் கரையோரத்தில் உள்ள கிராமங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீனாவின் 2 ஆவது மிகப்பெரிய நன்னீர் ஏரியான டாங்டிங் ஏரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையில் உடைப்பு ஏற்பட் டுள்ளது. இதனால் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து சுமார் 5,700 பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 2,300 இற்கும் மேற்பட்ட மீட்புப் படையினர் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதேசமயம் சீனாவின் மற்றொரு மிகப்பெரிய ஏரியான போயாங் ஏரியின் நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டின் நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு எதிராக வேட்பாளரை பொதுஜன பெரமுன நிறுத்தாது!

## கிராமங்களில் பிரசாரம் செய்யவும் திட்டம்

கொழும்பு, ஜூலை 08

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடத் தீர்மானித்தால் அவருக்கு ஆதரவு தெரிவிப்பது தொடர்பில் சிறீலங்கா பொதுஜன பெரமுன புதிய உத்தியைக் கையாளத் திட்டமிடுவதாகக் கூறப்படுகின்றது.**

இதன்படி, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே. வி. பி., முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதற்காக வேட்பாளர் ஒருவரை நிறுத்தவில்லை. இதேபோன்று, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும் ரணிலுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளதாக அறிய வருகின்றது.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவுக்கென தனிப்பட்ட ரீதியில் கிராமங்களிலிருந்து கூட்டங்களை நடத்தவும் தேவையெனில், மாவட்ட ரீதியாக இரு தரப்பினரும் இணைந்து ஒரே மேடையில் ஏறி 25இற்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்தவும் பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.



சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணர்த்தன அரசியலுக்கு வந்து 27 ஆண்டுகளான தையிட்டு களுத்துறையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி வேட்பாளரை நாம் இன்னும் தீர்மானிக்கவில்லை!

## மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என்று அந்தக் கட்சியின் தலைவரான மகிந்த ராஜபக்ஷ எம். பி. தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் என பிரபல வர்த்தகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக பெரேரா வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,

"எங்களின் கட்சி இது வரையில் இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை. இது குறித்த கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் வேட்பாளர் தொடர்பில் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்" - என்றும் அவர் கூறினார். (ஐ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்ப, ஜூலை 08

சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படவிருந்த 3 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர் ஒருவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரத்தின் நுழைவாயிலுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு - மருதானையை சேர்ந்த 43 வயதுடைய நபரே கைதானார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# சர்வதேச ஆய்வு கப்பல்களை அரசாங்கம் இனி தடுக்காது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஜூலை 08

இலங்கை கடற்பரப்பில் அடுத்த ஆண்டில் இருந்து சர்வதேச ஆய்வு கப்பல்களுக்கு தடை விதிக்கப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எமது அரசாங்கத்துக்கு பல்வேறு நாடுகளுடன் வேறுபட்ட சட்டங்கள் காணப்பட முடியாது - என்று அவர் கூறினார். சீன ஆய்வுக் கப்பல் நாட்டின் கடற்பரப்பிற்குள் நுழைய அனுமதி வழங்கப்படாமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# அரச ஊழியர்களுக்கு வேதன உயர்வு இல்லை

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

தேர்தல் காலம் நெருங்கி வருவதால் இந்த வருடம் அரச பணியாளர்களுக்கு மீண்டும் வேதனத்தை அதிகரிக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் வேதனத்தை அதிகரித்தாலும் அதனைச் செலுத்துவதற்கு அரசாங்கத்திடம் போதியளவு நிதி இல்லை.

எனவே, வரியை அதிகரிக்க வேண்டி ஏற்படும். தற்போது பெறுமதி சேர் வரி 18 சதவீதமாக உள்ள நிலையில், வேதனத்தை அதிகரிப்பதாயின் குறித்த வரி வீதம் 19 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும்.

அத்துடன், அரச சேவையில் 10 இலட்சம் பணியாளர்களே இருக்க வேண்டும் என்ற போதிலும், தற்போது 15 இலட்சம் ஊழியர்கள் உள்ளனர்.

அதேநேரம், இந்த வருடத்தின் நடுப்பகுதியிலிருந்து ஜனாதிபதி தேர்தலுக்கும், நாடாளுமன்ற தேர்தலுக்கும் தயாராக வேண்டும். எனவே, வேறு பணிகள் தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது என்பதுடன், இந்த வருடத்தில் அரச பணியாளர்களுக்கான மீண்டுமொரு வேதன அதிகரிப்பு என்பது சாத்தியமற்றது - என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

# 10,026 பாடசாலைகள் டிஜிற்றல் மயமாகும்!

## கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, ஜூலை 08

எதிர்காலத்தில் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கலில் உள்வாங்கப்படும். அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,250 பாடசாலைகள் தற்போது வலையமைப்பின் ஊடாக இணைக்கப்பட்டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் 10 ஆயிரத்து 26 பாடசாலைகள் டிஜிற்றல் மயமாகும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தின் 200 பாடசாலைகளை நவீனமயமாக்கும் திட்டத்துக்கான ஆரம்ப நிகழ்வு காலியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொழில்நுட்ப அறிவைப் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களில் 93வீத தொழில் சந்தையில் தொழில் வாய்ப்புக்கள் உள்ளன. நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உலகை வெல்லும் வாய்ப்பை நாம் பயன்படுத்த வேண்டும்.

இலவச கல்விச் சட்டம் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன்படி, 46 வீதமாக இருந்த எழுத்தறிவு விகிதம் 93 வீதமாக உயர்ந்துள்ளது.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், நவீன வகுப்பறைகள் என்பன அவசியமாகும். அதற்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்கு நன்றி - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# பதில் சட்டமா அதிபருடன் தேர்தல் குழுவினர் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 08

பதில் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் பதவிக்காலம் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணைக்குழு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி வர்த்தகரான சமிந்திர தயான் லெனவ என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு இன்று திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த நிலையிலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், வர்த்தகரான சமிந்திர தயான் லெனவவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களே பெயரிடப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் சார்பில் சட்டமா அதிபரே முன்னிலையாக வேண்டியுள்ளது. இதனால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் சட்டமா அதிபருடன் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் விரிவாக உரையாடியுள்ளனர்.

குறிப்பாக, 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுக்ள் என்பதோடு அரசமைப்பின் பிரகாரம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் அதிகார காலப்பகுதி உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றும்...

ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை, தொழில் சார் உரிமைகள் மற்றும் சலுகைகள் தொடர்பிலான பல பிரச்னைகளுக்கு தீர்வுகள் இல்லை ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (ஐ)

## ஜனாதிபதி...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு எமது கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து எமக்கு கிடைத்த பலத்துடன் இந்த அரசாங்கத்தில் ஒரு கட்சியாக செயல்படும்போது எப்போதும் அச்சமின்றி உங்களுக்கு உதவியுள்ளோம்.

அன்றைய தினம் ரோஹித அபேகுணவர்த்தன உட்பட எமது கட்சியில் உள்ள அனைவரும் இந்த நாட்டைக் காப்பாற்றும் திறன் உங்களிடமே இருக்கின்றது என்று தீர்மானித்தோம். இன்று வரை அந்த ஆதரவை நாங்கள் உண்மையாக வழங்கி வருகின்றோம். அந்த ஆதரவு தொடரும். இது நாட்டுக்காக எடுத்த முடிவு.

இந்த நாட்டு மக்களை நீங்கள் பாதுகாக்கும் வரை உங்களுக்கு எல்லா பலத்தையும் தருவோம் - என்றார். (ஐ)

## தலைவருக்கும்...

போராளிகளுக்கான உதவித் திட் டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற் றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"தலைவருக்கும் கருணா அம்மானுக்கும் இடையில் ஏற்பட்டது ஒரு சிறிய பிரச்னை. பேச்சின் அடிப்படையில் ஏற்பட்ட பிரச்னை. அதனை சிலர் பூதாகரமாக்கி வருகின்றனர்.

"தலைவரின் இழப்பு என்பதை இன்று நாங்கள் நினைத்துப் பார்க்கும் போதும் ஒரு வேதனையான விடயமாக இருக்கின்றது. அவரின் உடலை நான் சென்றே அடையாளப்படுத்தினேன். அது பெரும் வேதனையான விடயம். இன்று எத்தனையோ பேர் முதலைக் கண்ணீர் வடித்துக்கொண்டு தலைவரின் பெயரை விற்று வெளிநாடுகளில் நிதிக ளையும் வசூலித்துக்கொண்டு வாழ்கின் றார்கள்.

"நான் தலைவருடன் 22 வருடங்கள் பயணித்தவன். இன்றும் எனது அடிமனதில் அவரின் எண்ணங்களும் நினைவுகளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்று கருணா அம்மான் என்ற பெயர் வருவதற்கு காரணமே தலைவர் பிரபாகரன்தான்.

அதனை நான் மறக்கமாட்டேன். அதனை மனதில் கொண்டு எமது போராளிகளை சிறந்தமுறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

இன்று முக்கியமான ஒரு தினம். தமிழ் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் இன்று திருகோணமலையில் தகனம் செய்யப்படுகின்றது. அவரை மறக்கமுடியாது. நான் தலைவருடன் இந்தியாவிலிருந்தபோது அடிக்கடி சம்பந்தன் ஐயாவையும், மாவை ஐயாவையும் சந்தித்துப் பேசுவோம். தள்ளாடும் வயதிலும் தமிழர்களின் உரிமைக்காக குரல்கொடுத்துவந்த ஒரு மாமனிதர். அவருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை எமது கட்சி சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன். அவரின் இழப்பை பெரும் இழப்பாகவே பார்க்கின்றேன்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் பதவிக்காக போட்டி நடைபெறுகின்றது. பதவிக்காக சுமந்திரனும் சிறீதரனும் வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர். அந்தக் கட்சியானது இதுவரை காலமும் சம்பந்தன் என்ற ஒரு தூணில் தான் நின்றது. இன்று அந்த தூணும் சாய்ந்துவிட்டது. அவர்கள் சிதறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன", என்றார்.

(ஐ)

## தென்மராட்சி...

இந்த கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன், சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக கவனவீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிலவும் முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களின் இலவச சிகிச்சை உரிமையை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

## அரச ஊழியர்...

குறைவுக்கு வழிவகுத்தன.

மேலும் கடந்த ஆண்டு (2023) இறுதிக்குள் அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களின் மொத்த எண்ணிக்கையின்படி, பணியாளர்களின் பயன்பாட்டு விகிதம் 77 சதவீதம். 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது நான்கு சதவீதம் குறைந்துள்ளது.

அரச செலவினங்களை குறைக்கும் வகையில் அரச விதித்துள்ள கட்டுப்பாடுகள் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கிய காரணம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது. (ஐ)

## அரச...

வருடங்களில் பாதுகாப்பு படையி னரின் சம்பளத்துக்காக செலவிடப்பட்ட தொகை 17 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் முப்படையினருகு 21 ஆயிரத்து 787 கோடி ரூபாயும் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினருக்கு 9 ஆயிரத்து 413 கோடி ரூபாயும் ஊதியம் வழங்குவ தற்காக செலவிடப்பட்டதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (ஐ)

## 46/1...

2021 மார்ச் மாதம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான 46/1 தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பருடன் முடிவுக்கு வருகின்றது.

எனவே, இந்தக் கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் மேலும், காட்டமான புதிய பிரேரணையை முன்மொழியுமா அல்லது வேறு ஏதேனும் நகர்வுகளை மேற்கொள்ளுமா எனும் பல்தரப்பட்ட கேள்விகள் காணப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் இது தேர்தல் ஆண்டாகையால் புதியதோர் அரசாங்கம் ஆட்சிப் பீடமேறும் பட்சத்தில், அந்த அரசாங்கம் புதிய தீர்மானத்தை எவ்வாறு அணுகும்? அந்தத் தீர்மானம் அரசாங்கத்துக்கு சுமையாக அமையக் கூடுமா? என்பன போன்ற கேள்விகள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் இணை அனுசரணை நாடுகள் மத்தியில் காணப்படுகிறது. எனவே எதிர்வரும் செப்ரெம்பர் மாத கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக புதிய பிரேரணைக்கு பதிலாக இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த தீர்மானத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கும் சாத்தியப்பாடு குறித்து ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை தற்போது பிரிட்டனில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை அடுத்து, எதிர்வரும் மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கான அழுத்தத்தை ஏனைய இணையனுசரணை நாடுகளுக்கு பிரிட்டன் வழங்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இருப்பினும் அவ்வாறு கொண்டு வரும் பட்சத்தில் அதன்மீதான வாக்கெடுப்பு முடிவுகள் எத்தகையதாக அமையக்கூடுமென உறுதியாகக் கூற முடியாது - என்று கொழும்பு வார இதழ் ஒன்று மனித உரிமைகள் அமைப் புகளை மூலமாகக் கொண்டு செய்தி வெளியிட் டுள்ளது. (ஐ)

## சம்பந்தனின் இலட்சியத்தை...

முழுமையாக நிறைவேறவில்லை. அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும், பிரதமர் மோடியும் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவார்கள். அத்துடன் சம்பந்தன் விட்டுச்சென்ற பணியை முன்னெடுப்பதற்காக அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

**சந்தோஷ் ஜா**
**இந்திய தூதுவர்**

சம்பந்தன் வடக்கு, கிழக்குக்கு உட்பட்ட தலைவராக அல்லாது முழு இலங்கைக்கும் அவரது அறிவுரைகளை வழங்கியவராக இருந்தார். அத்துடன் அவருடைய வெற்றிடத்தினை நிரப்புவது மிகவும் கடினமாகும். எனினும் அவரின் இட்சியங்களை அடைவதற்காக நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

**மனோ கணேசன்**
**தலைவர், தமிழ் முற்போக்கு கூட்டணி**

பிரபாகரன் ஆயுதத்தால் பெறமுடியாத விடயத்தை சம்பந்தன் பேச்சு மூலம் பெறப் பார்க்கிறார் என்று சிங்களத் தலைவர்கள் தவறாக பிரசாரம் செய்தார்கள் - பொய்யுரைத்தார்கள். அந்த நிலைமை இன்னமும் மாறவில்லை.

இந்த நிலைமை மாறும் வரையில் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இரண்டாவது மூன்றாவது பிரஜைகளாக வாழ விரும்பவில்லை. எதிர்வரும் காலத்தில் நிலைமைகள் மாற்றப்பட்டு பல்லினமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**ரவூப் ஹக்கீம்**
**தலைவர், முஸ்லிம் காங்கிரஸ்**

முஸ்லிம்கள் அண்ணன் சம்பந்தன் மீது கொண்டிருக்கின்ற வாஞ்சை அளவிட முடியாதது. முஸ்லிம்களையும் அரவணைத்த ஒரு தீர்வு வடக்கு, கிழக்கில் வரவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதற்கு எதிராக சலசலப்புக்கள் அவ்வப்போது எழுந்த போது அதற்கு எதிராக தயங்காது சலனமில்லாது குரல் கொடுத்தார்.

**ரிஷாத் பதியுதீன்**
**தலைவர், அ. இ. மக்கள் காங்கிரஸ்**

சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதாக இருந்தால் பிரிந்திருக்கின்ற தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதே பொருத்தமானதாக இருக்கும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து வாழ்வதன் ஊடாகவே நியாயமான தீர்வை பெறமுடியும்.

**சித்தார்த்தன், தலைவர் - புளொட்**

தந்தை செல்வநாயகம், அண்ணன் அமிர்தலிங்கம் ஆகியோருக்கு அடுத்ததாக சமஷ்டி அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இறுதி வரையில் உறுதியாக இருந்த ஒருவரே சம்பந்தன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த தலைமைத்துவத்தில் இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும்.

**மாவை சேனாதிராசா**
**தலைவர், இலங்கை தமிழ் அரசு கட்சி**

தமிழ் மக்களின் தந்தையான செல்வா போன்று சம்பந்தனும் தமிழ் மக்களினால் பெருந்தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கின்றார். அதே போன்று அவர் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த விடயமான உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு தமிழ் மக்கள் உரித்துடையவர்கள் என்பதை இங்குள்ள தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**செந்தில் தொண்டமான்**
**ஆளுநர், கிழக்கு மாகாணம்.**

சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அடையாளத்தின் மறைவாகும். ஆகவே, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அவருடைய இலட்சியத்தை அடைவதற்காக தொடர்ந்தும் பயணிக்கும் என்று நம்புகின்றேன்.

**சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்**
**இலங்கை தமிழ் அரசு கட்சி**

சம்பந்தன் அனைத்து விடயங்களிலும் அர்ப்பணிப்புடன் காணப்பட்டார். அத்துடன், இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்பதிலும் சம்பந்தன் ஆத்மார்த்தமான அளவில் உறுதியாக இருந்தார்.

**நளிந்த திஸநாயக்க, தேசிய மக்கள் சக்தி**

தேசிய இனப்பிரச்னைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் சம்பந்தன் நம்பிக்கை கொண்டிருந்தார். 2015இல் அதற்காக அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். ஆனால் அந்த முயற்சியில் அவரால் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை.

**லக்ஷ்மன் கிரியெல்ல**
**எதிர்க்கட்சி பிரதம கொறடா**

சம்பந்தன் எப்போதும் இனங்களின் தனித்துவத்தையும் சமத்துவத்தையும் உறுதி செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அத்துடன் இனப்பிரச்னைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலும், மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். (ஐ)

## பொலிஸ்...

முன்னின்ற தலைவர். சம்பந்தனும் நானும் எப்போதும் பிரிக்கப்படாத இலங்கைக்காக எம்மை அர்ப்பணித்தவர்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று இரா. சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியையில் பங்கேற்று அஞ்சலி உரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரின் உரையில், பிரிக்கப்படாத இலங்கையில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டோம். பேச்சு கள் நடந்து கொண்டிருக்கும் வேளை யில், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நான் முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது. இதனால், கடந்த சில மாதங்களாக எங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுக்க முடியவில்லை.

இந்த கலந்துரையாடலை மீண்டும் தொடங்க முடியுமா என்று நான் விசாரித்தேன். ஆனால், அந்த வாய்ப்புக்கு முன்னரே சம்பந்தன் நம்மை விட்டு பிரிந்துவிட்டார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொலிஸ் அதிகாரம் இல்லாமல் மத்திய அரசிடம் இருந்து வேறு பல அதிகாரங்களை பெற்றுக்கொள்ள இப்போது பாராளுமன்றத்தில் இருக்கும் பிரதான உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். ஏனைய அதிகாரங்கள் பற்றி பின்னர் கலந்துரையாடலாம்.

புதிய பரிந்துரையாக, அதிகாரப் பகிர்வில் 13 ஆவது திருத்தத்தின் கட்டமைப்புக்கு அதிகபட்ச அதிகாரத்தை பரவலாக்குவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. இந்தப் பணியை நிறைவு செய்ய அனைவரையும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்", என்றார். (ஐ)

## சம்பந்தனின்...

இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

ஆயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் இரா. சம்பந்தனின் இறுதி ஊர்வலம் ஆரம்பமானது. திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவரின் பூதவுடல் அங்கு தீயுடன் சங்கமமானது.

இரா. சம்பந்தனின் இறுதிக் கிரியை நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவை ஆளும் பா. ஜ. கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை, இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இராஜதந்திரிகள், அமைச்சர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் எம்.பிக்கள், உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் முப்படையினர், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மீன்பிடிக்க சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூலை 08

குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

வாகரை - கிருமிச்சை குளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர், அதே பிரதேசத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, குறித்த மீனவர் நேற்று அதிகாலை வழக்கம்போன்று மீன்பிடிக்க குளத்துக்கு சென்றுள்ளார். நெடுநேரமாகியும் அவர் வராததால் உறவினர்கள் அவரை தேடிச் சென்றனர். அப்போது, அவரின் தோணி கரையில் மிதப்பதை கண்டனர்.

இதைத் தொடர்ந்து கடற்படையினரின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது, அவரின் சடலம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் பிரேதபரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மலையக கர்ப்பவதிகளுக்கு போசாக்கு உணவுத் திட்டம்!



கொழும்பு, ஜூலை 08

மலையக பெருந்தோட்டங்களில் உள்ள 3, ஆயிரம் கர்ப்பவதி பெண்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போசாக்கு உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அவர் நடத்திய கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் 1,500 சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள 26 ஆயிரம் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள காலை உணவு வழங்கும் புதிய வேலைத்திட்டமும் விரைவில் நடைமுறைக்கு வரும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு ஊடாக இவை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## கறுவா ஏற்றுமதி மூலம் 1.5 கோடி ரூபாய் இலாபம்

கொழும்பு, ஜூலை 08

கறுவா ஏற்றுமதி மூலம் இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் 1.5 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் 60 மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்தார்.

மெக்சிகோ, பெரு மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கே அதிகளவில் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கடந்த ஆண்டு 251 மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# அரசுக்கு 556 கோடி ரூபாயை நட்டம் ஏற்படுத்தினார் சஜித்!

### தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

கொழும்பு, ஜூலை 08

**எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் (2015-2019) முறையற்ற வீடமைப்பு கடன்களை வழங்கியமையால் அரசாங்கத்துக்கு 556. 4 கோடி ரூபாய் நட்டம் ஏற்பபடுத்தினார் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இதனால் சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் முறையற்ற முறையில் வழங்கப்பட்ட 53 ஆயிரத்து 709 பயனாளிகளின் கடன்கள் மட்டுப்படுத்தப்பட்டன என்றும் அவர் கூறினார்.

சஜித் பிரேமதாஸ அமைச்சராக இருந்தபோது 7 வீடமைப்பு திட்டங்களை நடைமுறைப் படுத்தினார். மாதிரி கிராமம், விசிறி கடன் உதவி, சிறுநீரக உதவி, விருசுமித்துரு உதவி, கிராம சக்தி, விசிறி உதவி மற்றும் வெள்ள உதவி திட்டம் என்பன அவையாகும்.

இந்த முறையற்ற வீட்டுக் கடன்களில் பெரும்பாலானவை 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் நடந்துள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ராஜீவ் சூரியாராச்சி கூறினார்.

2018 மற்றும் 2019 இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்ற வருடங்களாகும். 2019ஆம் ஆண்டில் மட்டும் 62 ஆயிரத்து 994 வீடுகள் நிர்மாணிக்கும் பணி தொடங்கப்பட்டு 40 ஆயிரத்து 500 வீடுகளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2015 மற்றும் 2019 காலப் பகுதிகளில், சஜித் பிரேமதாஸ 3 இலட்சத்து 41 ஆயிரத்து 510 வீடுகளை நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளார், ஆனால் 2 ஆயிரத்து 33 ஆயிரத்து 578 வீடுகளுக்கு மட்டுமே தேவையான ஒதுக்கீடு கிடைத்துள்ளது. இதனால் ஒரு இலட்சத்து 7,932 வீடுகளுக்கு தவணைத் தொகை வழங்க முடியவில்லை. காரணம், தேவையான ஏற்பாடுகள் இல்லாததே ஆகும்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர், புதிய திட்டங்களை ஆரம்பிக்கும் பணியை இடைநிறுத்தி பழைய திட்டங்களை முடிக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

இதன்படி, சஜித் பிரேமதாஸவின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுக்கடன் வழங்கும் நடவடிக்கையின் போது, 53 ஆயிரத்து 709 வீடமைப்பு பயனாளிகள் அதற்குத் தகுதியற்றவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டது.

இதனிடையே, தான் வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் ஆரம்பித்த வீட்டுக்கடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மையில் பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

இதற்கு பதிலளித்த தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, தடைசெய்யப்பட்டுள்ள கடன்கள் பிரேமதாஸவால் முறைசாரா முறையில் வழங்கப்பட்ட கடன்கள். இந்த கடன் வரம்பு கடனாளிகளின் உடன்படிக்கையின்பேரில் செய்யப்பட்டது - என்றார். (ஐ)

## தொடர்ச்சியான சம்பள உயர்வே வரிச்சுமை அதிகரிக்கக் காரணம்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



கொழும்பு, ஜூலை 07

தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்பை வழங்குவதன் மூலம் மக்களின் வரிச் சுமை அதிகரித்து செல்வதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியாமானால் நிச்சயமாக நாம் பெற்றுக்கொடுப்போம். மக்களின் வரிப்பணத்திலேயே சம்பளம் வழங்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்பை வழங்குவதன் ஊடாக மக்களின் வரிச் சுமை அதிகரித்து செல்கின்றது. நாட்டின் வரிப்பணம் முழுவதையும் சம்பளம் வழங்குவதற்கு செலவிட முடியாது.

ஏனெனில், வரிப்பணம் முழுவதையும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு செலவிடுவதன் மூலம் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது.

எனவே தற்போதைய நிலையில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளானவை அரசியல் பழிவாங்கல் செயல்பாடாகும் - என்றார். (ஐ)

## ஞானசாரருக்கு பொதுமன்னிப்பு; தடையாக முக்கிய அமைச்சர்?



கொழும்பு, ஜூலை 08

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பொதுமன் னிப்பு வழங்கப்படுவதை அமைச்சர் ஒருவர் தடுத்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும், இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்ற முக்கிய அமைச்சர் ஒருவர் தடையாக இருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

இனங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படும் வகையில் செயல்பட்டமைக்காக ஞானசார தேரருக்கு கடந்த மார்ச் மாதம் 4 ஆண்டுகள் கடூழிய சிறை நீதிமன்றம் விதித்திருந்தது. இவருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் 3 மகாநாயக்க தேரர்கள் கடந்த மே மாதம் கோரிக்கை விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாணவருக்கான புலமைப்பரிசில் 12ஆம் திகதி முதல் நடைமுறை!

கொழும்பு, ஜூலை 08

உயர்தரம் மற்றும் முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் - குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, மாவட்ட செயலாளர்கள் தலைமையில், அனைத்து வலயக் கல்வி பணிமனைகள், அதிபர்களின் ஒருங்கிணைப்புடன், இந்த புலமைப்பரிசில் வழங்கல் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் திகதி, நேரம், இடங்கள் மற்றும் அந்த மாவட்டங்களில் இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட புலமைப் பரிசில் பெறுபவர்களின் பெயர் பட்டியல்கள் அடுத்த சில நாட்களில் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவான உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்துக்கு தெரிவான மாணவர்களின் பெயர் பட்டியல் ஏற்கனவே ஜனாதிபதியின் பேஸ்புக் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

உயர்தர மாணவர்களுக்கு மாதம் 6ஆயிரம் ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும். ஒரு கல்வி வலயத்திலிருந்து 60 மாணவர்கள் வீதம் 6 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசில் வழங்கப்படும். இந்த மாணவர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுடன் ரூ.30 ஆயிரம் புலமைப்பரிசில் தொகை புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் வழங்குவதற்கும், அடுத்த மாதம் முதல் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதம் ரூ.6000 புலமைப்பரிசில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை உள்ள நாட்டின் 10,126 பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 12 மாதங்களுக்கு மாதாந்தம் ரூ.3000 வீதம் உதவித் தொகை வழங்கும் புலமைப்பரிசில் திட்டமும் இதன் கீழ் செயல்படுத்தப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு நிலுவைத் தொகையுடன் 12 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் வழங்கப்படும். மேலும் அடுத்த மாதம் முதல் மாதம் ரூ.3000 வீதம் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

அதன்படி, மாவட்ட மட்டத்தில் இந்தப் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் தொடர்பான புதிய தகவல்களைப் பெற ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தை தொடருமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.